# <u>தாரமங்கலம் நகராட்சி</u>

## <u>சாதாரணக்கூட்டம்</u>

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04.01.2022ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு தாரமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் கீழ்க்காணும் பொருள்கள் குறித்து பரிசீலித்து முடிவு செய்யப்பட்ட கூட்டபொருள்கள் குறித்த நடவடிக்கைகள்.

**தலைமை : திரு.மு.மங்கையர்க்கரசன்.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்,**
**தாரமங்கலம் நகராட்சி,**

**<u>பொருள் எண் :1</u>**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு ஆய்வாளர் துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் பொது சுகாதாரப்பணி செய்யும் தூய்மைபணியாளர்கள் அலுவலக உதவியாளர் ஈப்பு ஓட்டுநர் ஆகிய பணியாளர்களுக்கு அரசாணை (2டி) எண்37 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. நாள்.14.05.1999ன் படி பெண் தூய்மை பணியாளர்களுக்கு சேலைகண் ஜாக்கெட் மற்றும் அரசாணை (நிலை) எண்168 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை. நாள்.16.11.2015.ன் படி துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேற்பார்வையாளர், இழுவை ஓட்டுநர், அலுவலக உதவியாளர், துப்புரவு பணியாளர் ஆண் பணியாளர்களுக்கு முழுக்கால் சட்டை (Full pant), காக்கி துணி, தலைப்பாகை துணி, அலுவலகத்திற்கு தேவையான ஸ்கீரின், டேபிள் கிளாத், காடாதுணி மற்றும் துண்டு ஆகிய துணிகள் கொள்முதல் செய்வதற்கும் அதற்கு ஆகும் செலவினத்தை தாரமங்கலம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்வதற்கு இந்நகராட்சியின் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

## தாரமங்கலம் நகராட்சி

## சாதாரணக்கூட்டம்

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10.01.2022ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு தாரமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் கீழ்க்காணும் பொருள்கள் குறித்து பரிசீலித்து முடிவு செய்யப்பட்ட கூட்டபொருள்கள் குறித்த நடவடிக்கைகள்.

தலைமை : திரு.மு.மங்கையர்க்கரசன்.,
தனி அலுவலர் / ஆணையாளர்,
தாரமங்கலம் நகராட்சி,

பொருள் எண் :1

அரசாணை (நிலை) எண்.117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 07.12.2021ல் தாரமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தியதை உறுதி செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.122 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.1) துறை நாள்.08.12.2021. அரசாணையில் தாரமங்கலம் நகராட்சிக்கு ஆணையாளர் பணியிடம் உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தாரமங்கலம் நகராட்சி 27 வார்டுகளை கொண்ட இரண்டாம் நிலை நகராட்சி ஆகும். 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 30222 ஆகும் தற்போதைய மக்கள் தொகை 32035 ஆகும். இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 9.72 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். இந்நகராட்சியில் பேட்டரியின் மூலம் இயங்கும் வாகனம் 7–ம் மற்றும் டிராக்டர் வாகனம் 2 மட்டும் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்பாட்டில் உள்ளது. அலுவலக பயன்பாட்டிற்கு ஈப்பு வாகனம் ஏதும் இல்லை.

தாரமங்கலம் நகராட்சி எல்லைக்குள் 1.அருணாசலம்புதூர் 2.தாரமங்கலம் 3.பொத்தியாம்பட்டி 4.தாண்டான்வளவு 5.பெரியான்வளவு 6.காட்டூர் 7.ஏமராசன்வளவு 8.சின்னாக்கவுண்டம்பட்டி 9.மோட்டுப்பட்டி 10.ஆணைக்கவுண்டன்வளவு 11. முனியக்கவுண்டன் வளவு 12.கோழிகாட்டானூர் 13.வெட்னிக்கரடு 14.பாரக்கல்லூர் 15.கசுவரெட்டிப்பட்டி 16. பெரியாம்பட்டி 17.நங்கிரிப்பட்டி 18.குருவம்பாறைவளவு என்ற 18 குக்கிராமங்கள் உள்ளன. மேற்படி 18 கிராமங்களில் 10க்கு மேற்பட்ட கிராமங்கள் நகராட்சி அலுவலகத்திலிருந்து குறைந்த பட்சம் 3 அல்லது 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இந்நகராட்சி எல்லை பகுதிகளில் குடிநீர் வழங்கல், பொதுசுகாதார பணிகள், திடக்கழிவு பணிகள், தொற்றுநோய் தடுப்பு பணிகள், சாலைபணிகள், கொசு ஒழிப்பு பணிகள் மற்றும் தெருவிளக்குபணிகள் போன்ற அடிப்படை பணிகளை ஆய்வு செய்யவும் அவசரப்பணிகள் மற்றும் அத்தியாவசிய பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ளவும் அலுவலக பணிகளை செவ்வனவே செய்திடவும் நகராட்சி ஆணையாளர் அலுவலக பயன்பாட்டிற்கு ஈப்பு வாகனம் தேவையாக உள்ளது.

மேலும் தாரமங்கலம் நகராட்சியிலிருந்து சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் மற்றும் சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் சுமார் 25 கி.மீ தொலைவில் உள்ளது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திட்டபணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டத்திற்கு கலந்து கொள்ளவும், மேலும் சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் நடைபெறும் ஆய்வுக்கூட்டம், மாதாந்திர கூட்டங்களுக்கு கலந்து கொள்ளவும் நகராட்சி ஆணையாளரின் அலுவலக பயன்பாட்டிற்கு ஈப்பு வாகனம் தேவையாக உள்ளது.

மேற்கண்ட சூழ்நிலை தாரமங்கலம் நகராட்சி ஆணையாளரின் அலுவலக பயன்பாட்டிற்கு புதிய Bolero ஈப்பு வாகனம் DGS&D விலை அல்லது அரசு பயன்பாட்டிற்காக உள்ள சிறப்பு விலை விகிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்று கொள்முதல் செய்திடவும் மற்றும் புதிய ஈப்பு வாகனம் வாங்கிட ஆகும் செலவினத்தினை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் நகராட்சி பொதுநிதி வங்கி கணக்கில் 31.12.2021 ஆம் தேதிய இருப்பு விவரபட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று நகராட்சி ஆணையாளரின் அலுவலக பயன்பாட்டிற்கு புதிய Bolero ஈப்பு வாகனம் DGS&D விலை அல்லது அரசு பயன்பாட்டிற்காக உள்ள சிறப்பு விலை விகிதத்தில் கொள்முதல் செய்திடவும் மேலும் மற்றும் புதிய ஈப்பு வாகனம் வாங்கிட ஆகும் செலவினத்தினை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண் :2</u>

தாரமங்கலம் பேரூராட்சியானது அரசாணை (நிலை) எண்.117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.07.12.2021. நகராட்சியாக அறிவிக்கப்பட்டு இயங்கி வருகிறது. தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மண் சாலைகளை தார்சாலை மற்றும் கான்கிரீட் சாலைகளாக மாற்றி அமைக்கும் பணிகள் மதிப்பீடு ரூ.280.50இலட்சத்திற்கு 3 எண்ணிக்கை பணிகளை கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021–2022ன் கீழ் மேற்கொள்ள அரசின் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு வழங்கக்கோரியும், திட்டப்பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி நிதி ஒதுக்கீடு பெற மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

| Sl. No | Ward No | Name ofWork | Estimate Cost in Rs.Lakhs |
|---|---|---|---|
| 1 | 2 | Formation of BT Road @ Ward No:2 Tholasampatty Main Road to Pallakadu VIA Thandanvalavu Periyandichiamman Kovil in Tharamangalam Municipality. | 68.50 |
| 2 | 4 | Formation of BT Road @ Ward No:4 Nangavalli Main Road to Seeni Thottam in Tharamangalam Municipality. | 48.00 |
| 3 | 17 | Formation of BT Road @ Ward No:17 Mel Chinnagoundampatty Samathuvapuram in Tharamangalam Municipality. | 164.00 |
| | | **Total** | **280.50** |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. புதிய சாலைகளை அமைத்தல் பணிக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021–2022 ஆண்டின் கீழ் அரசின் நிதியுதவி மற்றும் நிர்வாக அனுமதி பெற்று மேற்காணும் பணியை மேற்கொள்ளவும், கூடுதலாகும் செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண் :3</u>

நகர்புற உள்ளாட்சித்தேர்தல்–2022 தொடர்பாக படிவம்–3ஏ–வின் சுருக்கம் மற்றும் வேட்பாளரின் விவரம். பதிவான வாக்குகளின் விவரம் மற்றும் தேர்தல் முடிவுகள் குறித்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது தொடர்பான பயிற்சி வகுப்பு 13.01.2022 ஆம் தேதி அன்று நடைபெற்றது. மேற்காணும் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டதில் தேர்தல் பணியில் படிவங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்வதற்கும், மாநில தேர்தல் ஆணையம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் உரிய நேரத்தில் அறிக்கை அனுப்பவும், நகர்புற உள்ளாட்சி தேர்தல்–2022–ல் கணினியின் பங்கு மிகவும் முக்கியமாக உள்ளது. ஆனால் தாரமங்கலம் நகராட்சியில் தற்போது மொத்தம் 4 கணினிகள் (பொறியியல் பிரிவு–1, வருவாய் பிரிவு–1, பொதுப்பிரிவு–2) என பயன்பாட்டில் உள்ளது. மேற்படி கணினிகளில் 3 கணினிகள் சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் கொள்முதல் செய்யப்பட்டது. மேலும் மீதமுள்ள 1 கணினியானது 2019 ஆம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டவையாக உள்ளது. 10 வருடங்களுக்கு முன்னர் கொள்முதல் செய்யப்பட்ட 3 கணினிகளும் அடிக்கடி பழுது ஏற்பட்டு சரிபார்த்து பயன்படுத்தப்பட்டு வருவதால் தாரமங்கலம் நகராட்சிக்கு கூடுதலாக கணினி மற்றும் புதியதாக ஜெராக்ஸ் மிசின், கொள்முதல் செய்திட இளநிலை உதவியாளர் மற்றும் கணினி இயக்குபவர் கோரியுள்ளனர்.

மேலும் தற்போது தாரமங்கலம் பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, 18 வார்டிலிருந்து 27 வார்டுகளாக வார்டுகளின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தப்பட்டுள்ளது. நகர்புற உள்ளாட்சி தேர்தல்–2022க்கு தேவையான அடிப்படை பணிகளான வாக்குச்சாவடி அமைத்து அதனை வெளியிடுதல், வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கு தேவையான அடிப்படை பணிகள், வாக்கு எண்ணும் மையம் தயாரித்தல் பணிகள், தேர்தல் தொடர்பான அனைத்து பணிகள் மற்றும் சொத்துவரி இரசீது, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்து சான்று வழங்குதல் மற்றும் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திலிருந்து மின்னஞ்சலில் வரப்படும் கடிதங்கள் மற்றும் அறிக்கைகள் உடனுக்குடன் பூர்த்தி செய்யவும், பதில் அறிக்கை அனுப்பி வைக்க வேண்டி இருப்பதாலும் தாரமங்கலம் நகராட்சியில் தற்போது உள்ள கணினிகள் மூலம் மிகவும் விரைவாக செய்திட இயலாது. மேலும் தாரமங்கலம் நகராட்சி அலுவலக உபயோக பயன்பாட்டிற்கு ஜெராக்ஸ் மிசின் ஏதுமில்லை. தற்போது அருகில் உள்ள கடைகளில் நகல் எடுத்து அதற்கு மாதந்தோறும் சுமார் ரூ.10000/– வரை செலவாகிறது. மேலும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் – 2022 அறிவிக்கும் பட்சத்தில் தேர்தல் தொடர்பான அனைத்து செலவினங்களும் தேர்தல் செலவினத்திற்காக நிதி ஒதுக்கீடு கிடைக்கும் வரை இந்நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

<u>தாரமங்கலம் நகராட்சி</u>

## <u>சாதாரணக்கூட்டம்</u>

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13.01.2022ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு தாரமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் கீழ்க்காணும் பொருள்கள் குறித்து பரிசீலித்து முடிவு செய்யப்பட்ட கூட்டபொருள்கள் குறித்த நடவடிக்கைகள்.

தலைமை : திரு.மு.மங்கையர்க்கரசன்.,
தனி அலுவலர் / ஆணையாளர்,
தாரமங்கலம் நகராட்சி,

<u>பொருள் எண் :1</u>

நகர்புற உள்ளாட்சித்தேர்தல்–2022 தொடர்பாக படிவம்–3ஏ–வின் சுருக்கம் மற்றும் வேட்பாளரின் விவரம். பதிவான வாக்குகளின் விவரம் மற்றும் தேர்தல் முடிவுகள் குறித்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது தொடர்பான பயிற்சி வகுப்பு 13.01.2022 ஆம் தேதி அன்று நடைபெற்றது. மேற்காணும் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டதில் தேர்தல் பணியில் படிவங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்வதற்கும், மாநில தேர்தல் ஆணையம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் உரிய நேரத்தில் அறிக்கை அனுப்பவும், நகர்புற உள்ளாட்சி தேர்தல்–2022–ல் கணினியின் பங்கு மிகவும் முக்கியமாக உள்ளது. ஆனால் தாரமங்கலம் நகராட்சியில் தற்போது மொத்தம் 4 கணினிகள் (பொறியியல் பிரிவு–1, வருவாய் பிரிவு–1, பொதுப்பிரிவு–2) என பயன்பாட்டில் உள்ளது. மேற்படி கணினிகளில் 3 கணினிகள் சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் கொள்முதல் செய்யப்பட்டது. மேலும் மீதமுள்ள 1 கணினியானது 2019 ஆம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டவையாக உள்ளது. 10 வருடங்களுக்கு முன்னர் கொள்முதல் செய்யப்பட்ட 3 கணினிகளும் அடிக்கடி பழுது ஏற்பட்டு சரிபார்த்து பயன்படுத்தப்பட்டு வருவதால் தாரமங்கலம் நகராட்சிக்கு கூடுதலாக கணினி மற்றும் புதியதாக ஜெராக்ஸ் மிசின், கொள்முதல் செய்திட இளநிலை உதவியாளர் மற்றும் கணினி இயக்குபவர் கோரியுள்ளனர்.

மேலும் தற்போது தாரமங்கலம் பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, 18 வார்டிலிருந்து 27 வார்டுகளாக வார்டுகளின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தப்பட்டுள்ளது. நகர்புற உள்ளாட்சி தேர்தல்–2022க்கு தேவையான அடிப்படை பணிகளான வாக்குச்சாவடி அமைத்து அதனை வெளியிடுதல், வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கு தேவையான அடிப்படை பணிகள், வாக்கு எண்ணும் மையம் தயாரித்தல் பணிகள், தேர்தல் தொடர்பான அனைத்து பணிகள் மற்றும் சொத்துவரி இரசீது,

பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்து சான்று வழங்குதல் மற்றும் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திலிருந்து மின்னஞ்சலில் வரப்படும் கடிதங்கள் மற்றும் அறிக்கைகள் உடனுக்குடன் பூர்த்தி செய்யவும், பதில் அறிக்கை அனுப்பி வைக்க வேண்டி இருப்பதாலும் தாரமங்கலம் நகராட்சியில் தற்போது உள்ள கணினிகள் மூலம் மிகவும் விரைவாக செய்திட இயலாது. மேலும் தாரமங்கலம் நகராட்சி அலுவலக உபயோக பயன்பாட்டிற்கு ஜெராக்ஸ் மிசின் ஏதுமில்லை. தற்போது அருகில் உள்ள கடைகளில் நகல் எடுத்து அதற்கு மாதந்தோறும் சுமார் ரூ.10000/– வரை செலவாகிறது. மேலும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் – 2022 அறிவிக்கும் பட்சத்தில் தேர்தல் தொடர்பான அனைத்து செலவினங்களும் தேர்தல் செலவினத்திற்காக நிதி ஒதுக்கீடு கிடைக்கும் வரை இந்நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

**<u>தாரமங்கலம் நகராட்சி</u>**

## <u>சாதாரணக்கூட்டம்</u>

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19.01.2022ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு தாரமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் கீழ்க்காணும் பொருள்கள் குறித்து பரிசீலித்து முடிவு செய்யப்பட்ட கூட்டபொருள்கள் குறித்த நடவடிக்கைகள்.

தலைமை : திரு.மு.மங்கையர்க்கரசன்.,
தனி அலுவலர் / ஆணையாளர்,
தாரமங்கலம் நகராட்சி,

<u>பொருள் எண் :01</u>

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சி 1 முதல் 27 வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல், சிக்கன் குனியா மற்றும் நீரினால் பரவும் நோய்கள் அதிகமாக இருப்பதால் முன்தடுப்புப் பணி நடவடிக்கை மேற்கொள்ள ஏற்கனவே பணி செய்த டெங்கு களப்பணியாளர்களை பணிநீட்டிப்பு சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல் முறை ஆணை எண் ந.க.எண்.249/2020/ பே3 நாள். 20.09.2021ன் படி 31.12.2021 வரை கால நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. காலநீட்டிப்பு முடிவடைந்துள்ளதால் பொதுசுகாதாரத்தை கருத்திற் கொண்டு வட்டார மருத்துவ அலுவலர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தாரமங்கலம் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற கடித ந.க.எண்.332/2020/அ1 நாள்.31.12.2021.ன்படி வரப்பெற்ற கடிதத்தில் டெங்கு சிக்கன் குனியா தடுப்பு பணி நடவடிக்கை மேற்கொள்ள (DBC) டெங்கு மஸ்துார் பணியாளர்கள் 20 நபர்களை மீண்டும் 01.01.2022 முதல் 31.03.2022 வரை 3 மாத காலத்திற்கு பணியமர்த்தி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க பொதுமக்களின் நலன்கருதியும் அதற்கு ஆகும் செலவினத்தொகையை இந்நகராட்சியின் பொதுநிதியில் இருந்து செலவு மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

<u>பொருள் எண் :02</u>

தாரமங்கலம் பேரூராட்சியாக செயல்பட்டு வந்தபோது வளமீட்பு பூங்கா (BIO Mining) திட்டம் ரூ 106 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்திட மன்றத்தீர்மான எண் 518 (04) 30.03.2021 ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பேரூராட்சிகளின் இயக்குநரகத்திற்கு 05.10.2020 நாளிட்ட கடிதத்தில் அனுப்பி வைக்கப்பட்டு ஒப்புதல் ஏதும் பெறப்படவில்லை. இந்நிலையில் தாரமங்கலம் பேரூராட்சியானது அரசாணை (நிலை) எண்117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்

07.12.2021 ன்படி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு வளர்ந்து வரும் நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

இதன் பரப்பளவு 9.72 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி மக்கள் தொகை 30222–ம் தற்போதைய கணக்கின் படி மக்கள் தொகை 32035–ம் உள்ளது. இந்நகராட்சி பகுதிக்கு தினசரி வந்து செல்லும் மக்கள் தொகை சுமார்2500. இந்நகராட்சியில் 27 வார்டுகள் உள்ளது. மொத்த வீதிகளின் எண்ணிக்கை – 160 குடியிருப்புகளின் எண்ணிக்கை –8840. இந்நகராட்சி பகுதி பெரும்பாலும் விவசாய பூமிகள் நிறைந்த பகுதிகளாகும். தாரமங்கலம் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் டிராக்டர்–2, டாடா ஏ.சி.இ–1 மற்றும் தள்ளுவண்டி–40, பேட்டரி வாகனம் – 7 ஆகியவைகளை பயன்படுத்தி குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. தினசரி சுமார் 8.400 டன் கழிவுகள் இந்நகராட்சியில் சேகரம் செய்யப்படுகிறது. இந்நகராட்சியில் சேகரமாகும் குப்பைகள் சங்ககிரி மெயின் ரோடு பகுதியில் உள்ள வளமீட்பு பூங்கா சர்வே எண்.244/3–இல் மொத்த விஸ்தீர்ணம் 5.33 ஏக்கரில் 2.47 ஏக்கர் பரப்பளவில் உள்ள இப்பகுதியில் செயல்பட்டு வருகிறது.

தாரமங்கலம் நகராட்சியில் தற்போது உள்ள குப்பை கிடங்கினுள் உள்ள குப்பைகளின் அளவினை தகுந்த பொறியாளர்கள் மூலம் தற்போது அளவீடு செய்ததில் சுமார் 13900$^{M2}$ அளவுள்ள குப்பைகள் உள்ளதாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நுண் உயிரி செயலாக்க முறையில் (Bio-Mining) உரமாக்கிட உரிய அலுவலரை (Expert person)அனுப்புமாறு அண்ணா பல்கலைக்கழக சுற்றுச்சூழல் இயக்குநருக்கு 30.12.2021 ஆம் தேதியில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தாரமங்கலம் நகராட்சியில் தினசரி சந்தை மற்றும் வாரச்சந்தை மூலம் மக்கும் குப்பைகள் தினந்தோறும் அதிகம் சேகரம் ஆவதாலும் வளர்ந்து வரும் நகரமாக உள்ளதாலும், நாள் ஒன்றுக்கு 8.400 டன் குப்பைகள் சேகரம் ஆவதாலும் இந்நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நுண் உயிரி செயலாக்க முறையில் (Bio-Mining) உரமாக்கிட மதிப்பீடு ரூ.120.00 இலட்சத்தில் திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில் தாரமங்கலம் நகராட்சியில் நுண் உயிரி செயலாக்க மையம் (Bio-Mining) ரூ.120/– இலட்சத்தில் அமைத்திட உரிய நிர்வாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு செயற்குறிப்பு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>தாரமங்கலம் நகராட்சி</u>

<u>தீர்மான நகல்</u>

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04.01.2022ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு தாரமங்கலம் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் தனி அலுவலர் தலைமையில் நடைபெற்றது.

தலைமை : திரு.மு.மங்கையர்க்கரசன்.,
தனி அலுவலர் / ஆணையாளர்,
தாரமங்கலம் நகராட்சி,

<u>பொருள் எண் :01</u>

சேலம் மாவட்டம் உள்ள தாரமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி அரசாணை (நிலை) எண்117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 07.12.2021 ன்படி தரம் உயர்த்தப்பட்டு இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. தாரமங்கலம் இரண்டாம் நிலை நகராட்சியின் பரப்பளவு 9.72 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 30222. தற்போதைய கணக்கின்படி மக்கள் தொகை 32035.ம் உள்ளது. இந்நகராட்சி பகுதிக்கு தினசரி வந்து செல்லும் மக்கள் தொகை சுமார் 2500. இந்நகராட்சியினை 27 வார்டுகளாக பிரிக்கப்பட்டு அதில் உள்ள மொத்த தெருக்கள் எண்ணிக்கை 160 மற்றும் குடியிருப்புகளின் எண்ணிக்கை 8810 ஆகும்.

தாரமங்கலம் பேரூராட்சியில் இருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு வளர்ந்துவரும் நகராட்சியாக உள்ளது. தாரமங்கலம் நகராட்சி சங்ககிரி சாலையில் நகரினை ஒட்டியுள்ள சர்வே எண்.244/3–இல் மொத்த விஸ்தீர்ணம் 5.33 ஏக்கரில் விஸ்தீர்ணம் 2.47 ஏக்கர் பரப்பளவில் வளமீட்பு பூங்காவும் மற்றும் மீதமுள்ள மொத்த விஸ்தீர்ணம் 2.86 ஏக்கர் பரப்பளவில் நகராட்சி மயானம் செயல்பட்டு வருகிறது. இம்மயானத்தில் இறந்தவர்களின் உடல்கள் புதைக்கப்பட்டும், மற்றும் எரியூட்டப்பட்டும் வருகிறது.

மேலும், இம்மயானப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள இறந்தவர்களின் உடல்கள் நினைவுச்சின்னமாக சிறிய அளவிலான நினைவு மேடைகள் அமைத்து மயானப்பகுதி முழுவதும் நினைவு மேடைகளாக ஆக்கிரமித்து தற்போது இறந்தவர்களின் உடல்களை புதைக்கும் பகுதிகளில் பெரும் சிக்கலாக உள்ளது. பின்வரும் காலங்களிலும் இறந்தவர்களின் உடல்களை புதைப்பதில் சிக்கல் எழும் நிலை உள்ளதாலும் ,

தாரமங்கலம் நகராட்சி வளர்ந்துவரும் நகராட்சியாக இருப்பதாலும் இம்மயானத்தினை சுகாதாரமான முறையில் சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் பராமரிக்கப்படவேண்டியதன் அவசியத்தினை கருத்தில் கொண்டும் இம்மயான வளாகத்தில் சர்வே எண் 244/3 –ன் வடமேற்கு பகுதியில் நவீன எரிவாயு கட்டடம் அமைத்து மயானத்திற்கு வரும் இறந்தவர்களின் உடல்களை சிறந்த முறையில் தகனம் செய்யும் வகையில் எரிவாயு தகனமேடை ரூ.150/– லட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு உரிய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட சூழ்நிலையில் , தாரமங்கலம் நகராட்சியில் சர்வே எண் 244/3–ன் வடமேற்கு பகுதியில் எரிவாயு தகனமேடை அமைக்கும் பணியினை மேற்கொள்ள 2021–22–ஆம் ஆண்டிற்கான கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் அல்லது அரசின் இதர திட்டங்களில் இருந்து முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதியினை வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு செயற்குறிப்பு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

# <u>தாரமங்கலம் நகராட்சி</u>

## <u>சாதாரணக்கூட்டம்</u>

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24.01.2022ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு தாரமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் கீழ்க்காணும் பொருள்கள் குறித்து பரிசீலித்து முடிவு செய்யப்பட உள்ள கூட்டபொருள்கள் குறித்த நடவடிக்கைகள்.

**தலைமை : திரு.மு.மங்கையர்க்கரசன்.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்,**
**தாரமங்கலம் நகராட்சி,**

<u>பொருள் எண்.01</u>

தாரமங்கலம் நகராட்சியில் 2021–2022 ஆம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி ஆணையாளர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு இவ்வலுவலக கடித ந.க.எண்.17/2022/அ1 நாள்.05.01.2022–ன் படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு 21.01.2022 ஆம் தேதி கீழ்க்கண்டுள்ள பட்டியலில் தெரிவித்துள்ளபடி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை ஏற்றுகொண்டு ஏற்கனவே முன் அனுமதி வழங்கப்பட்ட பொதுநிதியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிக்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர் | அதிகம் குறைவு | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சி அலுவலக கட்டிடம் பராமரிப்பு பணி செய்தல். | 1.10 | எம்.பழனிசாமி | –0.03 | 30 நாட்கள் |
| 2 | வார்டு எண் 23. தங்கசாலை வீதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் சிறுமின் விசை பம்பு, ஐந்து முனியப்பன் கோவில் பகுதியில் சின்டெக்ஸ் குட்டு அமைக்கும் பணி செய்தல். | 1.90 | எம்.பழனிசாமி | –0.10 | 30 நாட்கள் |
| | **மொத்தம்** | **3.00** | | | |

ஆணையாளர் குறிப்பு – மேற்கண்டுள்ள பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எம்.பழனிசாமி ஒப்பந்ததாரர் என்பவருக்கு பணி உத்திரவு வழங்கலாம்.

<u>பொருள் எண்.02</u>

தாரமங்கலம் நகராட்சி ஜனவரி 2022 செலவு சீட்டுகள் வரிசை எண் 731 முதல் 759 வரை தனி அலுவலரின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | செ.சீ. எண் | நாள். | காசோலை | செலவுகள் விவரம் | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | 731 | 03.01.2022 | 140176 | தாரமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேற்பார்வையாளர் தூய்மை பணியாளர்களுக்கு மற்றும் தற்காலிக பணியாளர்களுக்கு 12/2021 மாதம் ஊதியம் வழங்கியது. | 995728 |
| 2 | 732 | 03.01.2022 | 140177 | தாரமங்கலம் நகராட்சி கணினி இயக்குபவருக்கு 12/2021 ஆம் மாத ஊதியம் காசோலையாக வழங்கியது. | 19050 |
| 3 | 733 | 03.01.2022 | 140178 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை பிரித்தெடுக்கும் பணி செய்தமைக்கு 07/2021 இந்திரா மரகதம் மகளிர் குழுவிற்கு காசோலை வழங்கியது. | 328450 |
| 4 | 734 | 03.01.2022 | 140179 | 18வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் பரவாமல் இருக்க 01/2022 மாதம் மஸ்தூர் பணி செய்தமைக்கு காசோலை வழங்கியது. | 135500 |
| 5 | 735 | 03.01.2022 | 140180 | தாரமங்கலம் நகராட்சியில் உள்ள அனைத்து பொதுக்கழிப்பிடங்கள் 01/2022 ம் மாதத்திற்கு சுத்தம் செய்து கொடுத்தமைக்கு ஊதியம் வழங்கியது. | 16200 |
| 6 | 736 | 03.01.2022 | 140181 | தாரமங்கலம் நகராட்சி வார்டு மறுவரையறை முன்மொழிவு அனுப்பப்பட்டு 27 வார்டுகளுக்கு மற்றும் தாரமங்கலம் நகராட்சியில் வரைபடம் தயாரித்தமைக்கு பிளெஸ்ஸிங் ஜெராக்ஸ் கிப்ட் அண்டு ஸ்டேஷனரிஸ் –க்கு காசோலை வழங்கியது | 172434 |
| 7 | 737 | 03.01.2022 | 878026 | தாரமங்கலம் நகராட்சி 27 வார்டுகளுக்கும் வரைபடம் தயாரித்து தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தாரமங்கலம் நகராட்சியின் வரைபடத்தில் திருத்தம் செய்து கொடுத்தமைக்கு பிரைட் ப்யூச்சர் திரு.எம்.தேவராஜன் என்பவருக்கு காசோலை வழங்கியது | 30000 |
| 8 | 738 | 10.01.2022 | 140182 | தாரமங்கலம் பேரூராட்சி அலுவலக கோப்புகள் ஜெராக்ஸ் எடுத்தது மற்றும் பிளாஸ்டிக் தடை விழிப்புணர்வு நோட்டீஸ் அச்சடித்தது A4 size, Legal size , பேப்பர் வாங்கியமைக்கு ராசி பிரிண்ட்டர்ஸ் திரு.தனராஜ் என்பவருக்கு காசோலை வழங்கியது. | 14873 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | 739 | 10.01.2022 | 140183 | தாரமங்கலம் நகராட்சி 4 வது வார்டு கீழ்சின்னா கவுண்டம் பட்டியில் உள்ள உரப்பூங்காவில் குப்பைகள் மேடு பள்ளங்கள் மற்றும் 17 வது வார்டு பத்ரகாளியம்மன் கோவில் அருகில் பொதுமக்கள் நடைபாதை மேடு பள்ளங்களாக இருந்ததை JCB கொண்டு நிரவல் செய்தமைக்கு திரு.துரைமுருகன் தொகை காசோலை மூலம் வழங்கியது. | 20200 |
| 10 | 740 | 10.01.2022 | 140184 | தாரமங்கலம் நகராட்சியின் அலுவலக அவசர அவசிய தேவைகளை கருத்தில் கொண்டு எழுதுபொருட்கள் மற்றும் சில்லரை செலவினங்கள் மேற்கொண்டமைக்கு திரு.சி. இராமன் இ.நி.உ–க்கு காசோலை வழங்கியது. | 13107 |
| 11 | 741 | 10.01.2022 | 140185 | தாரமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேற்பார்வையாளர் தூய்மை பணியாளர்களுக்கு மற்றும் தற்காலிக பணியாளர்களுக்கு 2021–ம் வருட மிகை ஊதியம் வழங்கியது. | 136000 |
| 12 | 742 | 10.01.2022 | 140186 | தாரமங்கலம் நகராட்சியில் வார்டு எண் 4,7,10,17 ஆகிய வார்டு பகுதிகளில் உள்ள பொதுக்கழிப்பிடங்களில் பழுது நீக்கம் செய்து கொடுத்தமைக்கு திரு.எம்.பழனிசாமி என்பவருக்கு தொகை காசோலை மூலம் வழங்கியது. | 47,458 |
| 13 | 743 | 10.01.2022 | 620551 | தாரமங்கலம் நகராட்சி 2020–21 ஆம் ஆண்டு நபார்டு (RIDF XXVI) திட்டத்தில் வார்டு எண் 2 மற்றும் 3,6,7 ஆகிய வார்டுகளில் தார்சாலை அமைத்தல் பணி நிறைவுற்றமைக்கு இறுதிப்பட்டியல் தொகை திரு.சுரேஷ் அண்ட் கோ ஒப்பந்ததாரருக்கு காசோலையாக வழங்கியது. | 6,324,000 |
| 14 | 744 | 10.01.2022 | 140187 | தாரமங்கலம் நகராட்சி பொதுசுகாதார பணியாளர்களுக்கு 2021ஆம் ஆண்டுக்கான சீருடை கொள்முதல் செய்து வழங்கியமைக்கு காசோலை வழங்கியது. | 82243 |
| 15 | 745 | 10.01.2022 | 140188 | தாரமங்கலம் நகராட்சி யின் அனைத்து வார்டுகளுக்கும் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பொருட்டு கொசுமருந்து தெளிப்பான் உபகரணம் இயக்க டீசல் மற்றும் பெட்ரோல் வாங்கியமைக்கு தேவி டிரேடர்ஸ் என்ற நிறுவனத்திற்கு தொகை காசோலை மூலம் வழங்கியது. | 77614 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16 | 746 | 12.01.2022 | 140189 | தாரமங்கலம் நகராட்சியின் பொது சுகாதாரப் பணிக்கலுக்கு டிராக்டர் TN30AZ0964 , TN27 W 6780 வாகனங் களுக்கு டீசல் மற்றும் பெட்ரோல் 12/2021 மாதம் வாங்கியமைக்கு தேவி டிரேடர்ஸ் என்ற நிறுவனத்திற்கு தொகை காசோலை மூலம் வழங்கியது. | 29464 |
| 17 | 747 | 21.1.2022 | 14090 | தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை , வாரச்சந்தை சுங்கவசூல் ஆடு அடிக்கும் தொட்டி சுங்கம் வண்டிப்பேட்டை சுங்கம் ஆகிய கட்டணங்கள் உயர்த்துவதற்கு மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்தமைக்கு தொகை வழங்க காசோலை வழங்கியது | 8400 |
| 18 | 748 | 21.1.2022 | 14091 | தாரமங்கலம் நகராட்சி அலுவலக தொலைபேசி கட்டணம் 12/2021 ஆம் மாதத்திற்கு தொகை காசோலையாக BSNL நிறுவனத்திற்கு செலுத்தியது. | 1925 |
| 19 | 749 | 21.01.2022 | 140192 | தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகள், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் இதரவைகளின் 12/2021 ஆம் மாதத்திற்கு மின்கட்டணத்தொகை காசோலையாக மின்வாரியம் தாரமங்கலம் அலுவலகத்திற்கு செலுத்தியது. | 465658 |
| 20 | 750 | 21.01.2022 | 140193 | தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 12/2021 ஆம் மாதத்திற்கு குடிநீர்க்கட்டணத்தொகை கேட்பு காசோலையாக செலுத்தியது. | 747968 |
| 21 | 751 | 24.01.2022 | 140194 | தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய தேவையான பிளீச்சிங் பவுடர் கொள்முதல் செய்தமைக்கு JK கெமிக்கல்ஸ் என்ற நிறுவனத்திற்கு தொகை காசோலையாக வழங்கியது | 67260 |
| 22 | 752 | 24.01.2022 | 140195 | தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரப்பணிகளுக்கு தேவையான ஹைட்ரேட்டேடு லைம் கொள்முதல் செய்தமைக்கு KRG Enterprises கெமிக்கல்ஸ் என்ற நிறுவனத்திற்கு தொகை காசோலையாக வழங்கியது | 25200 |
| 23 | 753 | 24.01.2022 | 140196 | தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரப்பணிகளுக்கு தேவையான பிளீச்சிங் பவுடர் கொள்முதல் செய்தமைக்கு Thilagam Enterprises கெமிக்கல்ஸ் என்ற நிறுவனத்திற்கு தொகை காசோலையாக வழங்கியது | 12272 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 24 | 754 | 24.01.2022 | 140197 | தாரமங்கலம் நகராட்சி அலுவலக கணினிக்கு டோனர் மை நிரப்பியது,புதிய மாற்று டோனர் கொள்முதல், மானிடர் கொள்முதல் செய்தது, டோனர் பழுதுநீக்கம் செய்தல் ஆகிய பணிகளுக்கு Logic Infotech என்ற நிறுவனத்திற்கு தொகை காசோலையாக வழங்கியது | 47364 |
| 25 | 755 | 24.01.2022 | 140198 | தாரமங்கலம் நகராட்சி பொது சுகாதார பணியாளர்களுக்கு 01./2022 மாதத்திற்காள சோப்பு கொள்முதல் செய்து வழங்கியமைக்கு T.P. பொன்னுசாமி மளிகை என்பவருக்கு தொகை காசோலை மூலம் வழங்கியது | 9615 |
| 26 | 756 | 24.01.2022 | 140199 | தாரமங்கலம் நகராட்சியின் 13 , 4,10,17 வது வார்டு ஆகிய கழிப்பிடங்களின் செப்டிக் டேங்க் கழிவுநீர் வெளியேற்றி சுத்தம் செய்தமைக்கு ஜெயக்குமார் என்பவருக்கு காசோலை வழங்கியது. | 50000 |
| 27 | 757 | 24.01.2022 | 140200 | தாரமங்கலம் நகராட்சி பணியாளர்கள் மற்றும் தலைமை எழுத்தர் ஆகியோரது 11/2021 மற்றும் 12/2021 மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட கூட்டுறவு சிக்கன நாணய சங்க கடன் பிடித்தம் காசோலை மூலம் செலுத்தியது. | 878795 |
| 28 | 758 | 24.01.2022 | 140201 | தாரமங்கலம் பேரூராட்சியில் பணிபுரிந்து பணிஓய்வு பெறும் நாளில் தற்காலிக பணிநீக்கம் பெற்ற செயல் அலுவலர்கள் திரு.ஆர்.பெரியசாமி, திரு.ஏ.பிரபுதாஸ் ஆகியோருக்கு 12/2021 ம் மாத பிழைப்பூதியம் அவர்களது வங்கி கணக்கிற்கு ECS முறையில் செலுத்தியது | 58082 |
| 29 | 759 | 24.01.2022 | 140202 | தாரமங்கலம் நகராட்சி தலைமை எழுத்தர் திருமதி. ஜோசப்பின் மேரி என்பவரது 22.07.2021 முதல் 20.09.2021 வரை 61 நாட்களுக்கு ஈட்டிய விடுப்பு ஊதியம் காசோலை மூலம் செலுத்தியது. | 56610 |

**பொருள் எண்.03**

தமிழ்நாடு தேர்தல் ஆணைய அறிவிக்கை நாள்.26.01.2022ல் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்–2022 தொடர்பான அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.மேற்கண்ட அறிவிக்கையின்படி தாரமங்கலம் நகராட்சியின் 27 வார்டுகளுக்கும் தேர்தல் நடைபெற உள்ளது. தாரமங்கலம் நகராட்சியில் தேர்தல் பணியில் முதற்கட்டமாக வேட்புமனுக்கள் பெறுதல், வேட்பு மனு ஆய்வு, வேட்பாளர் இறுதிப்பட்டியல் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி 31.02.2022, 09.02.2022 மற்றும் 13.02.2022 ஆகிய மூன்று நாட்கள் பயிற்சி நடத்துதல், தேர்தல் பயிற்சிக்குத் தேவையான படிவங்கள் அச்சடித்தல்,

மேற்கண்ட வாக்குச்சாவடி அலுவலர்கள் பயிற்சி மையங்களில் தொலைக்காட்சி பெட்டி, ஒலிப்பெருக்கி வசதி ஏற்படுத்துல், வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் பயிற்சியாளர் களுக்கு டீ, நொறுக்குத்தீனிகள் வழங்குதல், வேட்புமனு பெறும் நாள்முதல் வேட்பு மனு ஆய்வு நாள் வரையில் நகராட்சி அலுவலகம் முன்பு சாமியானா, இருக்கைகள், ஒலி பெருக்கி, வீடியோ போன்ற பணிகளுக்கு தேர்தல் செலவினங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், மேற்கண்ட செலவினங்களுக்கு தேவையான நிதியினை தாரமங்கலம் நகராட்சி பொதுநிதியில் முன்பணமாக பெற்று பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்.04**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான பல்வகை இனங்களை அரசாணை (நிலை) எண் 181 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 19.09.2008ன்படி கீழ்க்கண்ட இனங்கள் ஏலம் விட இந்நகராட்சியின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

| வ.எண் | இனம் |
|---|---|
| 1. | தினசரி மார்க்கெட் சுங்க வசூல் |
| 2. | வாரச்சந்தை சுங்க வசூல் |
| 3. | வண்டிப்பேட்டை சுங்கவசூல் |
| 4. | ஆடு அடிக்கும் தொட்டி |

ஆகிய 1 முதல் 4 வரை வரிசைஎண் கொண்டுள்ள இனங்களை 2022 – 2023 ஆம் ஆண்டிற்கு (01.04.2022 முதல் 31.03.2023 வரை) ஏலம் நடத்திட ஆணையாளர் / தனிஅலுவலர் அவர்களின் நகர்மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

**<u>பொருள் எண்.05</u>**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான நவீன ஆட்டு இறைச்சிக்கடை எண் 5,6 மற்றும் 7 ஆகிய கடைகள் பழுதடைந்து நிலையில் உள்ளதால், அக்கடைகளை முன்னாள் ஏலம் எடுத்த ஏலதாரர்கள் திரு.ரவி திரு.வெள்ளையன் மற்றும் திரு.கிட்டு ஆகியோர் கடைகளை வேண்டாம் என்று எழுதிக்கொடுத்து கடையை நகராட்சியிடம் ஒப்படைத்துவிட்டனர். ஆகையால், அக்கடைகளை பழுதுநீக்கம் செய்யும் வரை ஏலம் நடத்த இயலாது. மேலும் அக்கடைகளுக்கு 01.01.2022 ஆம் தேதி முதல் மாத வாடகை நிர்ணயம் செய்வதிலிருந்து விலக்கு அளிக்குமாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**<u>பொருள் எண் : 06</u>**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் பேரூராட்சிக்கு உதவி கோட்டப்பொறியாளர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு நெடுஞ்சாலை ஓமலூர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடித எண்.7/2021/உ/ நாள்.15.09.2021–ன்படி வரப்பெற்ற கடிதத்தில், அரசு சாலையோர மரங்கள் மரமகசூல் குத்தகை தொகை 01.07.2021 முதல் 30.06.2022 முடிய உள்ள காலத்திற்கு தாரமங்கலம் பேரூராட்சிக்கு உட்பட்ட கீழ்க்கண்ட சாலையோரம் உள்ள மரங்களுக்கு உரிய குத்தகை தொகை ரூ.6363/– மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1146/– ஆக மொத்தம் ரூ.7509/– உரிய தலைப்பில் தொகை செலுத்தவும் வங்கி வரைவோலை அனுப்பி வைக்கவும் மற்றும் ஏலம் விடுவதற்கும் மன்ற தனி அலுவலரின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

1. தாரமங்கலம் – நங்கவள்ளி குஞ்சாண்டியூர் சாலை கி.மீ.0/0–5/0 தொகை ரூ.3349/–
2. தொளசம்பட்டி சாலை கி.மீ.0/0–7/0 தொகை ரூ.4160/–